மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பு வரையறுக்கும் காதல்

# Poonthazhal Tradition Poetry Collection Defines Love

யுகேந்திரன் ரமேஸ்/ Yugentdiran Rames[1]
[1]Undergraduate Student, Sultan Idris Education University
Corresponding Email: yugenrames@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பு வரையறுக்கும் காதல் குறித்த பார்வையே இவ்வாய்வின் நோக்கமாகும். காதல் உணர்வு, காதலின் மேன்மை, காதலின் அறம், காதலில் ஏக்கம் எனப் பல கருத்துகளை இந்நூலில் காண முடிகின்றது. இந்த ஆய்வு பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பில் இருக்ககூடிய கவிதைகளே இந்த ஆய்வின் முதல் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. காதல் சார்ந்த கருத்துகளையும், காதலின் வெளிபாட்டையும் மிகவும் உணர்வு பூர்வமாகக் கவிஞர் இப்பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளின் வழி வெளிபடுத்தியுள்ளார்.

**கருச்சொற்கள்:** கவிதை, பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பு, காதல்

**Abstract**

The aim of this study is to look at love-based theme in Poontzhal traditional poetry collection. It can be seen that this book expresses many other concepts such as the feeling of love, the blacks of love, the superiority of love, the moral of love, and longing for love. This study has been carried out using qualitative approach. Poems that can be found in Poontzhal traditional poetry collection have been used as the primary data of this study. It can be seen that the poet has very sensitively expressed the ideas and expression of love in his Poontzhal traditional poetry collection.

**Keywords:** Poem, Poontzhal, Love

**முன்னுரை**

காதல் என்பது மனிதர்களின் வாழ்க்கையில் இடம்பெறும் ஓர் உன்னதமான அனுபவம் ஆகும். கவிஞர்கள், ஓவியர்கள், இலக்கியவாதிகள், தத்துவமேதைகளென மேலும் பல துறைசார்ந்தவர்களும் தங்களது காதல் உணர்வுகளை அவர்களது நடையில் வெளிப்படுத்தி உள்ளனர். மனித இனத்திற்குக் களங்கமில்லாத, சுயநலமில்லாத பரவசத்தைத் தரக்கூடியது காதல். அஃது ஏற்படுத்தும் மயக்கம் அற்புதமானது. துன்பத்திலிருந்து விடுபட வைத்து இருவருக்கும் இடையே சுகமான உணர்வை ஏற்படுத்தக்கூடியது காதல். காதலின் சிறப்புகளையும், அதிலிருக்கும் உண்மை உணர்வினையும் வெளிக்கொணர சிறந்ததொரு வழிமுறையாக அமைவது கவிதை இலக்கியம் எனலாம். அவ்வகையில், மலேசிய மரபு கவிஞர் மு.ஆசை தம்பி என்பவரால் இயற்றபட்ட பூந்தழல் எனும் மரபுகவிதைத் தொகுப்பானது, நல்லதொரு காதல் உறவிற்குச் சிறந்ததொரு வழிகாட்டி எனலாம். இந்த மரபுகவிதைத் தொகுப்பில் காதலின் சிறப்பானது பல வகையில் வரையரைக்கப்பட்டுள்ளது.

**தரவுப் பகுப்பாய்வு**

1) இறுதிவரை ஒருவருக்கொருவர் நம்பிக்கை கொண்டிருப்பதே காதல்.

காதலில் நம்பிக்கை என்பது உயிரும் உடலும் இணைந்திருப்பதற்கு ஒப்பாகும். உடலில் இருத்து உயிர் பிரிந்தால் அந்த உடலுக்கு எவ்வாறு மதிப்பு இல்லாமல் போகிறதோ, அதே போலக் காதலில் நம்பிக்கை இழந்தால், அவ்வுறவும் அதற்கான மதிப்பை இழந்துவிடும். தலைவனும் தலைவியும் ஒருவர் மீது மற்றொருவர் வைத்திருக்கும் நம்பிக்கை தான் காதலின் வலிமையை உணர்த்துகின்றது. இதில் ஒருவருக்கு மற்றொருவர் மீதான நம்பிக்கை குறைந்தாலும், அந்தக் காதல் வலிமையற்றதாகிவிடும். காதலில் நாம் உறுதியாக இருக்கின்றோம் என்று ஒருவருக்கொருவர் தங்கள் நம்பிக்கையைத் தெரிவிக்கும் பொழுது தான் அவர்களது உறவு மேலும் வலுவடைகின்றது. இதனையே கவிஞர் தன்னுடைய கவிதையில் இவ்வாறு கூறியுள்ளார் :

கடலது வற்றினும் தென்றல்
காற்றது அடங்கினும் வையம்
உடைந்திரண் டாயினும் மறவேன்
உன்னை" என்றதும் முகமலர்ந்தாள்!

(காதலி, பக்கம் 111, காதல்)

2) ஒருவரின் நினைவிலும் நிலைத்து நிற்பது காதல்

காதலுக்கு இடம், பொருள், ஏவல் என எவ்வித வரையறையும் இல்லை. காதல் தலைவன் தலைவிக்கிடையிலான பிரிவிலும் நிலைத்து நின்றிருக்கிறது. தலைவன் தலைவிக்கிடையில் பிரிவு ஏற்பட்டபோதெல்லாம் அவ்விருவரின் காதலில் எவ்வித களங்கமும் ஏற்பட்டதல்ல.

அவர்களின் நினைவில் என்றும் மாறாமல் நிலைத்து நிற்கும் நினைவுகளே அதற்கு முக்கியக் காரணமாகும். தலைவியின் பிரிவைத் தாங்கும் மனப்பக்குவத்தைத் தலைவனுக்குத் தரவல்லதாகத் தலைவியின் நினைவுகள் விளங்குகின்றது. இதனைக் கவிஞர் தன்னுடைய கவிதையில் இவ்வாறு கூறியுள்ளார்:

அவ்வின்பக் காட்சியிலே

ஆழ்தவனாய் நானிருந்தேன்;

இவ்வையம் தனைவிட்டே

எங்கோநான் பறந்திருந்தேன்!

எவ்வாறு நானுரைப்பேன்

யான்பெற்ற இன்பத்தை!

இவ்வேளை அவளில்லை

என்னருகில் என்செய்வேன்?

(அவள் நினைவு, பக்கம் 104, காதல்)

3) உயிரினும் மேலானது காதல்

ஒரு மனிதன் இவ்வுலகில் நீண்டு வாழ்வதற்கு மிக முக்கியமாக விளங்குவது அவனின் உயிர் மட்டுமே. அத்தகை உயிரைக் காட்டிலும் மேலானது தலைவன் தலைவியின் காதல் உணர்வே. தலைவிக்கோ தலைவனுக்கோ ஒரு சிறு துயரம் ஏற்பட்டாலும் உயிரைக் கூடத் துச்சமாக எண்ணி, துணிந்து அத்துயரத்தை நீக்க முயல்வர். உயிரைக் காட்டிலும் தலைவன் தலைவியின் காதல் என்றும் மேலானது. தலைவன் தலைவி சேர்ந்து வாழ்வதற்கு வழியில்லையெனில் சேர்ந்து மரணிப்பார்களே தவிர, காதலை ஒருபோதும் இருவரும் எந்தச் சூழ்நிலையிலும் விட்டுத்தரமாட்டர்கள். அவ்வகையில், உயிரினும் மேலானது காதல் என்பதைக் கீழ்க்காணும் கவிதை வரிகளின் மூலம் கவிஞர் எடுத்துரைக்கின்றார்:

"உயிரையும் தூசென மதித்தேன்!

உன்னையே வழ்வெனக் கொண்டேன் !

சுயமடி என்காதல்!" என்றேன் !

தோகையும் மறுமொழி சொன்னால் !

(காதலி, பக்கம் 111, காதல்)

என்றும் பிரியாத உணர்வை ஏற்படுத்துவது காதல். பிரிவு என்பது மனிதர்களின் வாழ்வில் ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் உணர்வு. நமக்குப் பிடித்த அல்லது அதிகம் விருப்பிய எந்தவொரு விடயத்தையும் என்றாவது ஒருநாள் பிரிந்துதான் ஆக வேண்டும் என்பது விதியாக அமைந்தாலும் காதலில் அப்படி வரையறுக்கப்படவில்லை. அதன் காரணம்

யாதெனில், காதலானது தலைவன் தலைவிக்கிடையே என்றும் பிரிதல் கூடாது என்ற எண்ணத்தை ஏற்படுத்துமாம். அதையே கவிஞர் அவர்கள்

தட்டுத்தடு மாறிப்பல
நாளாய்மனம் தளர்ந்தேன்!
சொட்டுத்துளித் தேனாய்மொழி
சொன்னாலுயிர் துளிர்ப்பேன்!
பட்டுத்தளிர் விரல்கள்கரம்
பற்றிப்பதம் அறிவேன்!
விட்டுப்பிரி யாதேஉனை
விதிபோல்தொடர்ந் திடுவேன்!
(கேளேன் ஒரு வரமே, பக்கம் 115, காதல்)

எனும் கவிதைவரிகளில் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது பல நாட்களாகத் தன்னுடைய காதலியின் நினைவில் வாடும் காதலன், அவளது குரல் கேட்டால் மீண்டும் உயிர் பெறுவான் என்றும், விதிபோல அவளை என்றும் விட்டுப்பிரியாமல் உடனிருப்பான் என்றும் கூறியுள்ளார். ஆக, காதல் என்றும், பிரியா எண்ணத்தை ஏற்படுத்தும் என்பதைக் கவிஞர் வரையறுத்துள்ளார்.

## நிறைவுரை

காதல் என்பது பல வகையில் பலரால் வரையறுக்கப்பட்டாலும், இந்தக் கவிதைத் தொகுப்பில் வரையறுக்கப்பட்டுள்ள காதல் மிகவும் இன்மைபாய்க்கும் வகையில் அமைந்துள்ளதை இந்த ஆய்வின் முடிவில் அறிய முடிந்தது. அதோடு, இந்தக் கவிதை தொகுப்பில் காதலின் மேன்மையையும், காதலில் இருக்க வேண்டிய ஒழுக்கத்தையும் மிகவும் தெளிவாகக் கவிஞர் ஆசைத்தம்பி வெளிக்கொணர்ந்துள்ளார் என்பதையும் ஆய்வின் வழி அறிந்து கொள்ள முடிந்தது.

## துணைநூற்பட்டியல்

Arsaithamby, M. (2021). Poonthazhal: antolaji tamil kavitaikal. Uma Publications.

Bhondekar, R. (n.d.). Why Love is Most Important?. Love matters. | by Roshan Bhondekar. Medium. Retrieved May 2, 2023, from https://medium.com/@roshan_b/why-love-is-most-important-a3afd9ce52ff.